மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 56/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | முனுசாமி | நாள் | 16.11.2023 |
| தகப்பனார் பெயர் | லட்சுமணக்கவுண்டர் | | |

**2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

24) நான் அனுபவத்தில் உள்ளதாக சொல்லும் தாவா சொத்திலுள்ள வீட்டிற்குரிய மின் கட்டணத்தை நான் தொடர்ந்து செலுத்தி வருவதாக சொல்லியுள்ள நிலையில், அவ்வாறு எத்தனை வருடங்களுக்கு நான் தொடர்ந்து மின் கட்டணம் என் பெயரில் செலுத்தி வருகிறேன் என்றால், சுமார் 15 ஆண்டுகளுக்கு செலுத்தி வந்துள்ளேன். குறிப்பாக எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை செலுத்தி வந்தேன் என்றால், குறிப்பாக என்னால் சொல்ல இயலாது.

25) தாவா சொத்திலுள்ள வீட்டிற்குரிய குடிநீர் இணைப்பு எப்போது என் பெயரில் வழங்கப்பட்டது என்றால், 1979ம் வருடத்தில் என் பெயரில் பெறப்பட்டது. 1ம் பிரதிவாதியின் பெயரில் வரிவிதிப்பு மாற்றப்படும் வரை தொடர்ந்து நான் தான் என் பெயரில் நகராட்சிக்கு குடிநீர் கட்டணம் செலுத்தி வந்தேன். மேற்படி மின் கட்டண ரசீதுகளோ, குடிநீர் கட்டண இரசீதுகளோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

26) பொதுவாக அரசு அதிகாரிகள் ஆவணத்தின் அடிப்படையிலும், அனுபவத்தின் அடிப்படையிலும் தான் பட்டா மாறுதல் நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள் என்றால் சரிதான். மேற்படி பட்டா மாறுதல் சம்பந்தமாக நான் மேட்டூர் வருவாய் கோட்டாட்சியருக்கு மனு அளித்து மேற்படி மனுவை அவர் மேட்டூர் வட்டாட்சியருக்கு பரிசீலனைக்காக அனுப்பி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

27) மேற்படி மனு தொடர்பாக நடவடிக்கை எடுக்காததால் மேட்டூர் வருவாய்

கோட்டாட்சியருக்கும், வட்டாட்சியருக்கும் பல முறை மனு அளித்ததாக நான் சொல்லிய நிலையில் குறிப்பாக எந்தெந்த தேதிகளில் அவ்வாறு மனுக்களை அனுப்பியுள்ளேன் என்றால், என்னால் குறிப்பாக தேதிகளை கூற இயலாது. அவ்வாறு நான் மனுக்கள் அளித்தற்கான ஆதாரம் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான் சொல்வதுபோல் உண்மையில் அவ்வாறு வருவாய் துறையினருக்கு ஏதேனும் மனுக்களை அளித்திருந்தால் அவற்றை தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு எந்த ஆதாரத்தையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யாமல், 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கெதிராக பொய்யான குற்றச்சாட்டுகளை முன் வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

28) கடந்த 19.03.2008 ம் தேதியில் நான் மேட்டுர் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு அளித்ததாக சொல்லும் நிலையில் மேற்படி மனுவை பெற்றுக்கொண்டு அதை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்ககோரி மேட்டுர் வட்டாட்சியருக்கு கோட்டாட்சியர் பரிந்துரை செய்து மேற்படி நடவடிக்கை குறித்து மனுதாரரிடம் தெரிவிக்குமாறு உத்தரவிட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் அவ்வாறு கோட்டாட்சியரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அவ்வாறு உத்தரவு நகல் எதுவும் என்னிடம் தரவில்லை.

29) என் சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவின் நகல் எனக்கு சார்வு செய்யப்பட்டதாக குறிப்பிட்டிருந்தால் அது தவறானது என்றால் சரிதான். நான் வருவாய் துறையினருக்கு அளித்த மனுவின் பேரில் வருவாய் துறையினர் உரிய நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றாலும், ஆனால் மேற்படி கோட்டாட்சியரும், வட்டாட்சியரும் நடவடிக்கை எடுக்கவில்லையென என் பிரமாண வாக்கு மூலத்தில் நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

30) கோட்டாட்சியரும், வட்டாட்சியரும் பொய்யான அறிக்கையை சமர்ப்பித்து சரியாக ஆய்வு செய்யாமல், தவறாக பட்டா மாறுதல் செய்துள்ளதாக நான் சொல்லியுள்ள

நிலையில் மேற்படி அதிகாரிகள் உண்மையிலேயே தவறு செய்திருந்தால் அது தொடர்பாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி மாவட்ட வருவாய் அதிகாரியிடம் நான் மனு அளித்துள்ளேனா என்றால், மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தேன். எந்த தேதியில் அவ்வாறு மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தேன் என்றால், தேதி சரியாக நினைவில்லை. அதற்கான ஆதாரம் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

31) எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையேயுள்ள தனிப்பட்ட பிரச்சனை காரணமாக வருவாய் துறையினரான 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளின் மீது அடிப்டை முகாந்திரம் இன்றி எவ்வித ஆவணங்களும் இன்றி பொய்யான குற்றச்சாட்டுகளை முன் வைத்து தேவையற்ற தரப்பினர்களாக இவ்வழக்கில் நான் சேர்த்துள்ளதால், மேற்படி 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளை பொறுத்து அதிகபட்ச செலவு தொகையுடன் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.